**செய்தி வெளியீடு எண்: 639** **நாள்: 10.09.2018**

**செய்தி வெளியீடு**

மாணவர்களிடையே தமிழிலக்கியப் படைப்பாற்றலை வளர்த்திடும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ் மன்றம் 2003 – 2004ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடந்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. கவித்திறனைப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவர்களிடையே வளர்க்கும் நோக்கில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் தமிழ் மன்றம் சார்பில் மாநிலம் முழுவதும் 11.09.2018 மற்றும் 14.09.2018 ஆகிய நாள்களில் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பயிலும் கல்லூரி முதல்வர் / துறைத்தலைவரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையை பெற்று போட்டி நாளன்று மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை/உதவி இயக்குநர்களிடம் நேரில் அளிக்க வேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும்.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூபாய் 7000/–மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5000/–மும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**